# சிற்றிலக்கியங்கள்

‘சிற்றிலக்கியம்’ என்ற சொல்லாட்சி வருவதற்கு முன் ‘பிரபந்தம்’ என்ற சொல்லே வழக்கில் இருந்தது. பிரபந்தம் என்ற வட சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். பெருங்காப்பியங்களின் உறுப்பாக அமைந்திருந்த தூது, புறம் முதலான பலவும் பிற்காலத்தை தனித்தனி இலக்கிய வகைகளாக உருப்பெற்றன.

- ❖ சிற்றிலக்கியம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றினை பற்றி அமைவது ஆகும்.
- ❖ சிற்றிலக்கியம் என்பது அளவில் சுருங்கியதாக அமையும். அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஏதேனும் ஒன்றைப் பற்றியதாக அமையும்.
- ❖ ஏதேனும் ஒரு துறையை மட்டும் கூறும். சிற்றிலக்கியம் தலைவனின் வாழ்க்கையில் ஒரு பகுதியை மட்டுமே கூறும்.
- ❖ சிற்றிலக்கியங்கள் கி.பி. 15 முதல் கி.பி. 19ஆம் நூற்றாண்டுகளில் மேலோங்கி நின்றன.
- ❖ தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலத்தை சிற்றிலக்கிய காலம் என்பர்.
- ❖ இறைவன், மன்னன், மக்களுள் சிறந்தோர், முதலானோரின் சிறப்புகளை எடுத்துக் கூறும் நோக்கிலேயே சிற்றிலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன.
- ❖ பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்கி கூறுகின்றன.
- ❖ பாட்டியல் நூல்கள் வச்சணந்தி மாலை குறிப்பிட்டு சொல்லக்கூடிய நூலாகும்.
- ❖ சிற்றிலக்கியங்களை பற்றி தெளிவாக கூறும் நூல் பன்னிரு பாட்டியலாகும்.
- ❖ சிற்றிலக்கியங்கள் 96 வகை என்று முதன் முதலாக கூறிய நூல் பிரபந்த மரபியல் ஆகும்.
- ❖ கோவை உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி முதலியவை சிற்றிலக்கியங்களில் சிறப்பானவைகளாக கருதப் பெறுகின்றன.
- ❖ வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் 96 எனக் கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

- ❖ குறவஞ்சி
- ❖ குறிஞ்சி நிலத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் ஆகும்.
- ❖ இச்சிற்றிலக்கிய வகை தொல்காப்பியனார் கூறிய வனப்பு என்ற நூல் வகையுள் வைக்கப்படும்.
- ❖ பாட்டுடைத் தலைவன் உலா வரும் பொழுது அவனைக் கண்டு காதலுற்ற தலைவி, தன் காதல் நிறைவேறுமா என்று ஐயம் கொள்ளும் பொழுது அங்கு வருகின்ற குறவஞ்சி, தலைவியின் கையை பார்த்து அவளுக்கு நல்வாக்கு சொல்வதே குறவஞ்சியின் நூல் அமைப்பு முறையாகும்.
- ❖ ஆடி பாடி தன்னை மகிழ்வித்த குறவஞ்சிக்கு தலைவி பரிசளித்த பின் குறவஞ்சி தன் கணவன் சிங்கனுடன் மலைநாட்டுக்கு செல்வாள்.
- ❖ ஆடிப்பாடும் போது குறவஞ்சி தங்கள் நாட்டு வளம், மலைவளம், வாழ்க்கை முறை பற்றி எடுத்துக் கூறுவதாகவும் பாடல்கள் அமைந்திருக்கும். இயற்றமிழ், இசைத்தமிழ்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

ஆகிய இரண்டு வகையும் கலந்து பலவகைப் பாக்களால் பாடப்படுவதாகும்.

- ❖ குறவஞ்சி அகப்பொருள் நூலாயினும் தலைவன், தலைவி பெயர் சுட்டப்படும்.
- ❖ முதல் குறவஞ்சி நூல் 'குற்றால குறவஞ்சி' ஆகும்.

**'இறப்பு நிகழ்வெதிர் வெண்ணும்முன்**
**காலமும் திறம்பட உரைப்பது குறத்திப்**
**பாட்டே' – பன்னிரு பாட்டியல்.**

| | |
|---|---|
| திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| சரபேந்திர பூபாளக் குறவஞ்சி | கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் |
| தமிழரசி குறவஞ்சி | வரத நஞ்சையப்ப பிள்ளை |
| பெத்தலேகம் குறவஞ்சி | வேதநாயக சாஸ்திரியார் |
| அழகர் குறவஞ்சி | கவி குஞ்சர பாரதியார் |
| கூட்டுறவுக் குறவஞ்சி | துரை சீனிவாசன் |
| கும்பேசர் குறவஞ்சி | பாபநாச முதலியார் |

**பரணி**

போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரனைப் பாடுவது 'பரணி' இலக்கியமாகும் என்று இலக்கண விளக்கப் பாட்டியல் கூறுகிறது.

**'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மாண வனுக்கு வகுப்பது பரணி'**

**– இலக்கண விளக்கப் பாட்டியல் 839**

அமர்– போர்; மாணவன்– படைவீரன்

**'ஏழ்தலை பெய்த நூறுஉடை இபமே**
**அடுகளத்து அட்டால் பாடுதல் கடனே'**

**– பன்னிரு பட்டியல் 243**

- இபம் – யானை,
- அடுகளம் – போர்க்களம்
- அட்டால் – கொன்றால்
- கடன் – முறைமை

- எழுநூறு யானைகளைக் கொன்ற ஏந்தலை பாராட்டுவதே பரணி இலக்கியம் என்று பன்னிரு பாட்டில் கூறுகிறது.
- இரண்டடி தாழிசையால் பாடப்படுவது பரணியாகும். பரணியின் பா வகை கலித்தாழிசை. தோற்றவர் பெயரில் பரணி நூல் வழங்கப்படும்.
- 'பரணி என்ற நாள்மீன் காளியையும் எமனையும் தன் தெய்வமாக பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது'. **– உ.வே.சாமிநாத ஐயர்**

**தமிழில் முதலில் எழுந்த பரணி கலிங்கத்துப்பரணியாகும்.**

| | |
|---|---|
| கலிங்கத்துப்பரணி | ஜெயங்கொண்டார் |
| தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் |
| மோகவதைப்பரணி | தத்துவராயர் |
| பாசவதைப்பரணி, அஞ்ஞவதைப் பரணி | வைத்தியநாத தேசிகர் |
| வங்கத்துப்பரணி | அரங்க சீனிவாசன் |
| போர் பரணி | வாணிதாசன் |
| சீனத்துப்பரணி | மு.பி.பாலசுப்பிரமணியன் |
| திராவிடப்பரணி | கி .அரங்கசாமி |

**தூது**

- ❖ தன் கருத்தை மற்றொருவரிடம் தெரிவிக்க, தன் சார்பாக ஒருவரை அனுப்பும் வகையில் பாடப்படும் இலக்கியம் 'தூது' ஆகும்.
- ❖ 'காமம் மிக்க கழிபடர்கிளவி' என்ற தொல்காப்பிய அடியின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம் தூது.
- ❖ 'தொடை (மாலை) வாங்கி வா' என்று கூறும் இலக்கியம் தூது.
- ❖ இது அகத்தூது, புறத்தூது என இரு வகைப்படும்.

**பயிறருங் களிவெண் பாவி னாலே**
**உயர்திணைப் பொருளையும் அஃறிணை**
**பொருளையும்**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே.**

**– இலக்கண விளக்கப் பாட்டியல்**

**அகத்தூது இலக்கியத்தின் இருவகை**

- தெய்வத்திடம் மானிடப் பெண் காதல் கொண்டு தூது விடுப்பது.
- தெய்வத்திற்கு இணையான மனிதன் மீது காதல் கொண்டு, பெண் தூது விடுப்பது.

**தூதின் இலக்கணம்**

**தூது இலக்கியத்தின் வேறு பெயர்களான;**

- வாயில் இலக்கியம்
- சந்து இலக்கியம்
- தலைவன் ஒருவன்பால் காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலைத் தலைவனுக்கு உரைத்து அவன் மாலையை பெற்று வருமாறு தூது அனுப்புவதாகப் பாடுவது தூது என்னும் இலக்கியம் ஆகும்.
- கிளி, அன்னம், குயில், மயில், மான், வண்டு, நெஞ்சம், மேகம், தென்றல், தமிழ் முதலியவற்றை தூது விடுப்பதாய் வென்டளை விரவிய கழிவெண்பாவில் இந்நூல் பாடப்படுவது வழக்கம்.
- மேற்கண்ட பத்து பொருள்களையும் தூதாக அனுப்பி இலக்கியம் படைத்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவார்.
- தூது நூல் பாடும் ஆசிரியர் தம்மையே தலைவியாய் பாவித்து கொண்டு பாட்டுடைத் தலைவனின் பண்பு நலன்களையும் பெருமையையும் பலவாறு புகழ்ந்து பாடுவது மரபாகும்.
- தூது இலக்கியத்தில் முதலாவதாக இயற்றப்பட்ட நூல் 'நெஞ்சு விடு தூது' ஆகும்

| | |
|---|---|
| நெஞ்சு விடு தூது | உமாபதி சிவாச்சாரியார் |
| அழகர் கிள்ளை விடு தூது, தென்றல் விடு தூது | பல பட்டடை சொக்கநாதப் பிள்ளை |
| விறலி விடு தூது | சுப்ரதீபக் கவிராயர் |
| காக்கை விடு தூது | வெள்ளைவாரணர் |
| தமிழ்விடு தூது | ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை |
| தச விடு தூது | மீனாட்சி சுந்தரம் பிள்ளை |

**<u>கலம்பகம்</u>**

- பல்வகை வண்ணமும் மணமும் நிறைந்த மலர்களைத் தொடுத்துக் கட்டிய மாலையைக் கதம்பம் என்பர்.
- அதுபோல பல்வகை உறுப்புகளும் பலவகை பாவும், பாவினங்களும், பொருள்களும் கலந்து பாடப்படும் சிற்றிலக்கிய வகையை கலம்பகம் என்ற பெயரால் வழங்கினர்.
- கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாக கூறியுள்ளார் டாக்டர் உ.வே.சா அவர்கள். அந்தாதித்தொடை அமைய பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம் ஆகும்.
- இந்நூல் அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும்
- கலம் + பகம் = கலம்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| புய வகுப்பு | ஊசல் | தழை | வண்டு | களி |
| அம்மானை | இரங்கல் | தவம் | குறம் | சம்பிரதம் |
| கார் | மறம் | சித்து | காலம் | |
| பாண் | கைக்கிளை | தூது | மாதங்கி | |

களம் என்றால் 12 பகம் என்றால் ஆறு ஆக 18 உறுப்புகளைக் கொண்டது கலம்பகம் ஆகும்.

**18 உறுப்புகள்:**

| | |
|---|---|
| நந்திக்கலம்பகம் | ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை |
| திருவரங்கக் கலம்பகம் | பிள்ளை பெருமாள் ஐயங்கார் |
| மதுரை கலம்பகம், காசிக்கலம்பகம் | குமரகுருபரர் |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் | நம்பியாண்டார் நம்பி |
| திருவாமாத்துார் கலம்பகம், தில்லை கலம்பகம் | இரட்டையர்கள் |
| திருக்காவலூர் கலம்பகம் | வீரமாமுனிவர் |
| புள்ளிருக்கு வேளூர் கலம்பகம் | படிக்காசு புலவர் |
| திருச்செந்திற் கலம்பகம் | சாமிநாத தேசிகர் |
| சேயூர்க் கலம்பகம் | அந்தக் கவி வீரராகவர் |

**அந்தாதி**

❖ அந்தம் என்ற சொல்லுக்கு ‘இறுதி’ என்றும், ஆதி என்ற சொல்லுக்கு ‘முதல்’ என்றும் பொருள் ஆகும்.

❖ ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.

❖ இதனை ‘சொற்றொடர் நிலை’ என்றும் வழங்குவர்.

❖ தமிழ் இலக்கியத்தில் தோன்றிய முதல் அந்தாதி ‘அற்புதத் திருவந்தாதி’ ஆகும்.

**அந்தாதியின் வகைகள்**

➢ பதிற்றுப்பத்தந்தாதி
➢ யமக அந்தாதி
➢ திரிபந்தாதி
➢ நீரோட்ட யமக அந்தாதி
➢ சிலேடை அந்தாதி ஆகியனவாகும்.

| | |
|---|---|
| அற்புத திருவந்தாதி | காரைக்கால் அம்மையார் |
| சரஸ்வதி அந்தாதி, சட கோபுரந்தாதி | கம்பர் |
| திருவேங்கட அந்தாதி | பிள்ளை பெருமாள் ஐயங்கார் |
| திருக்கருவை பதிற்று பத்தாந்தாதி | அதிவீரராம பாண்டியன் |
| வீரை அந்தாதி, கோமதி அந்தாதி | அண்ணாமலையார் |
| பொன் வண்ண அந்தாதி | சேரமான் பெருமாள் நாயனார் |

**உலா**

❖ பாட்டுடைத் தலைவன் உலா வருதலைச் சிறப்பித்து பாடுதலால் இவ்விலக்கியம் ‘உலா’ என்னும் பெயர் பெற்றது.

❖ உலா என்பதற்கு ‘பவனி வரல்’ என்பது பொருளாகும்.

❖ தலைவன் வீதியில் உலா வர ஏழுவகை பருவ மகளிரும் கண்டு காதல் கொள்வதை கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும்.

❖ இவ்விலக்கியம் கலிவெண்பாவால் இயற்றப்படும்.

❖ இவ்விலக்கியம் உலாப்புறம் எனவும் வழங்கப்படும்.

❖ பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, நீராடல், ஒப்பனை செய்தல், பரிகாரங்கள் புடை சூழல் தன் ஊர்தியில் ஏறி உலா வரல் ஆகியவற்றை உலாவின் முன்னிலை எனவும், உலாவரும் தலைவனை கண்டு காதல் கொண்ட ஏழுவகை பருவ மகளிர் தனித்தனியாகக் கூறுவனவற்றை உலாவின் பின்னிலை எனவும் கூறுவர்.

**முன்னிலைத் தலைவனின் பருவங்கள்**

| பருவம் | வயது |
|---|---|
| பாலன் | 1–7 |
| மீளி | 8–10 |
| மறவோன் | 11–14 |
| திறலோன் | 15 |
| காளை | 16 |
| விடலை | 17–30 |
| முதுமகன் | 30– ற்கு மேல் |

**ஏழு பருவங்களை சார்ந்த பெண்கள்**

| பருவங்கள் | வயது |
|---|---|
| பேதை | 5–7 |
| பெதும்பை | 8–11 |
| மங்கை | 12–13 |
| மடந்தை | 14–19 |
| அரிவை | 20–25 |
| தெரிவை | 26–32 |
| பேரிளம் பெண் | 32–40 |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**ஊரோடு தோற்றமும் உரித்தென மொழியப**
**– தொல்காப்பியம் 1031 – ஆவது நூற்பா**

❖ என்ற தொல்காப்பியர் கூற்றிற்கு ஏற்ப தோன்றியது உலாவகை இலக்கிய தோற்றம்.

**வேறு பெயர்கள்**

➢ பவனி
➢ பெண்பாற் கைக்கிளை
➢ தலைவன் உலா வர பயன்படுத்துவது தேர், குதிரை, யானை ஆகியவாகும்.
➢ தமிழ் இலக்கியத்தில் தோன்றிய முதல் உலா 'திருக்கைலாய ஞான உலா' ஆகும்.

| | |
|---|---|
| திருக்கைலாய ஞான உலா | சேரமான் பெருமாள் நாயனார் |
| தில்லை உலா, மூவருலா | ஒட்டக்கூத்தர் |
| ஆளுடைய பிள்ளை திரு உலா மாலை | நம்பியாண்டார் நம்பி |
| ஏகாம்பரநாதர் உலா, திருக்கழுக்குன்றம் உலா | அந்த கவி வீரராகவர் |
| திருக்குற்றாலநாதர் உலா | திரிகூட ராசப்ப கவிராயர் |
| சிவந்தெழுந்த பல்லவராயன் உலா | படிக்காசுப் புலவர் |

**பள்ளு**

❖ இவ்விலக்கியம் மருத நிலத்தை மையமாகக் கொண்டது.

❖ பல் என்பது பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்கு நடைபெறும் உறவினையும் குறிக்கும்.

❖ ஆகவே பல்லு உழவரின் பாட்டு பெயராக வந்தது. பல்லு சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.

**'சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்**
**புலனென மொழிப புலனுணர்ந்தோரே'**

**– தொல்காப்பியம்**

❖ தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகை பிரிவுகளில் ஒன்றான 'புலன்' என்னும் இலக்கிய வகை 'பள்ளு வகை' இலக்கியத்திற்கு பொருந்தும் என்பர்.

❖ பாவகை – சிந்தும் விருத்தமும் பரவி வரும்.

❖ இளங்கோவடிகள் தம் நூலாகிய சிலப்பதிகாரத்தில் இவ்விளக்கத்திற்குரிய கூறுகளை குறிப்பிட்டுள்ளார். பன்னிரு பாட்டியல் என்னும் இலக்கண நூல் 'உழத்திப்பாட்டு' என்று இவ்வகையை குறிக்கிறது.

❖ பாமர மக்களுக்கு முதன்மைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இலக்கிய வகைகள் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலியனவாகும். பள்ளு வகையில் முதலில் தோன்றிய இலக்கியம் 'முக்கூடற்பள்ளு' ஆகும்.

**பழமொழி**

**'நெல்லு வகையை எண்ணினாலும்**
**பள்ளு வகையை எண்ண முடியாது'**

**வேறு பெயர்கள் :**

❖ பள்ளு நாடகம், பள்ளு மூவகை தமிழ், பள்ளேசல், பள்ளிசை.

❖ பள்ளு என்ற இலக்கியம் முத்தமிழுக்கும் உரியது. முக்கூடற் பள்ளுவிற்கு பின் குருகூர் திருவாரூர்ப்பள்ளு, ஞானப்பள்ளு, திருவிடைமருதூர்ப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு போன்ற பல நூல்கள் தோன்றின.

## பிள்ளைத்தமிழ்

இறைவனையோ, அரசர்களையோ, அறிவிச் சிறந்த சான்றோர்களையோ, பாட்டுடைத் தலைவராக கொண்டு அவரை குழந்தையாக கருதி பாட பெறுவது பிள்ளைத்தமிழ் ஆகும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| 3–ம் திங்கள் | காப்பு |
| 5–ம் திங்கள் | செங்கீரை |
| 7–ம் திங்கள் | தாலாட்டு |
| 9–ம் திங்கள் | சப்பானி |
| 11–ம் திங்கள் | முத்தம் |
| 13–ம் திங்கள் | வருகை |
| 15 –ஆம் திங்கள் | அம்புலி |
| 17–ஆம் திங்கள் | சிற்றில் ( ஆண் பால்/ கலங்கு பெண்பால்) |
| 19–ஆம் திங்கள் | சிறுபறை( ஆண்பால் / அம்மானை பெண்பால்) |
| 21 –ஆம் திங்கள் | சிறு தேர் ( ஆண்பால் / ஊசல் பெண்பால்) |

அவர்தம் குழந்தை பருவத்தை 10 பருவங்களாக பகுத்துக் கொண்டு பருவத்துக்கு 10 ஆசிரிய விருத்தங்கள் அமைய பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆகும்.

**இரு பாலருக்கும் பொதுவான பருவங்கள் ஏழு**

1. காப்பு
2. முத்தம்
3. செங்கீரை
4. வருகை
5. தாள்
6. அம்புலி
7. சப்பாணி

**ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய இறுதி மூன்று பருவங்கள்**

1. சிற்றில்
2. சிறுபறை
3. சிறு தேர்

**பெண்பார் பிள்ளைத் தமிழுக்குரிய இறுதி மூன்று பருவங்கள்**

1. அம்மானை
2. கலங்கு நீராடல்
3. ஊசல்

**குளவி மருங்கினும் கிழவதாகும்**

– தொல்காப்பியம் 1030– வது நூற்பா.

மேற்கண்ட தொல்காப்பிய நூற்பா பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையை குறிக்கிறது. தமிழில் தோன்றிய முதல் **'பிள்ளைத்தமிழ் இலக்கியம்'** குலோத்துங்கன் பிள்ளை தமிழாகும்.

| | |
|---|---|
| குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் | ஒட்டக் கூத்தர் |
| மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் | பகழிக்கூத்தர் |
| காந்தி அம்மை பிள்ளைத்தமிழ் | அழகிய சொக்கநாதர் |
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் |
| சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ் | அந்த கவி வீரராகவர் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in